<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI.</u>

| MCOP. No. 548/2013 | | | |
|---|---|---|---|
| Name: | கார்த்திவேல் | Religion: | இந்து |
| Father's Name: | அங்கமுத்து | Caste: | |
| Village: | வெப்படை | Calling: | தறி  மற்றும் விவசாயம் |
| Taluk: | குமாரபாளையம் | Age: | 30 |

Date: 8.8.2019 – PW –1

மனுதாரர் தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் விபத்தின் போது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன் என்றால் ஆமாம். அப்போது பஸ்சானது நேருக்கு நேர் வந்து மோதியதா என்றால் நான் ரோட்டின் இடது பக்கமாக சென்று கொண்டிருந்தேன். பஸ் வலது பக்கமாக ஏறி வந்து மோதியது. நான் சென்று கொண்டிருந்த போது ஒரு லாரி போய்க் கொண்டிருந்ததா என்றால் இல்லை. எனக்கு முன்னால் லாரி போய்க் கொண்டிருந்தது என்றாலும், நான் லாரியை வலதுபுறமாக முந்திச் சென்றபோதுதான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்துக்கு என்னுடைய கவனக்குறைவும், அஜாக்கிரதையும்தான் முழுக்காரணம் என்றாலும், அரசுப் பேருந்து ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. நான் விபத்தில் நஷ்டஈடு பெறுவதற்காக அரசுப் பேருந்தின் ஓட்டுநர் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளரையும், காப்பீட்டாளரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். அவசிய தரப்பினரைச் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய வயது, வேலை, வருமானம் ஆகியவற்றை காட்ட நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் விவசாயம் மூலம் மாதம் ரூ.40 ஆயிரம் சம்பாதித்து வந்ததைக் காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். விபத்து சமயத்தில் நானும், என் பின்னால் உட்கார்ந்து வந்தவரும் ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரிதான். நான்தான் வாகனத்தை ஓட்டத் தெரியாமலும், சாலை விதிகளை பின்பற்றாமலும், வேகமாக ஓட்டிச் சென்று எதிரே வந்த பஸ்சின் மீது மோதி இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மருத்துவ செலவிற்காக ரூ.50 ஆயிரத்திற்கு மேல் செலவானதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடானது அதிகம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

Sd/- Karthivel

Sd/-M. Mekala Mythili,
Sub Judge, Sankari.

IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI.

| MCOP. No. 548/2013 | | | |
|---|---|---|---|
| Name: | பாரத் | Religion: | இந்து |
| Father's Name: | வெங்கட்ராஜ் | Caste: | |
| Village: | வீரப்பன்சத்திரம் | Calling: | வியாபாரம் |
| Taluk: | ஈரோடு | Age: | 42 |

Date: 8.8.2019 – PW –2

மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 2 ஆம் மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை.

நான் மனுவில் மனுதாரர். மனுவில் 2 வது சாட்சி. முதல் விசாரணைக்காக பிரமாணப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதில் என்ன விவரங்கள் தெரியும். படித்துப் பார்த்துக் கையொப்பம் செய்தேன். எனது மகன் சௌந்தரராஜனுக்கு வழங்கப்பட்ட காயச்சான்றிதழ் ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்கிறேன். 5.11.2013 ம் தேதியில் ஈரோடு ஆர்த்தோ சென்டரில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி ம.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்கிறேன். ஈரோடு ஆர்த்தோ சென்டரில் வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் ம.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்கிறேன். விபத்தின் போது எடுக்கப்பட்ட ஊடுகதிர் படம் ம.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்கிறேன். எனது சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக் கொண்டு மனுப்படி தீர்ப்பளிக்க வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** - இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று நேரடியாகத் தெரியாது என்றால் ஆமாம். இந்த விபத்தின்போது வாகனத்தை ஓட்டிச்சென்ற கார்த்திவேல்தான் வாகனத்தை வலதுபுறமாக ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றாலும், அவர்தான் விபத்திற்கு முழுக்காரணம் என்றாலும், அரசுப் பேருந்தின் ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்றாலும் சரியல்ல. நஷ்டஈடு பெற வேண்டும் என்ற காரணத்திற்காக அரசுப் பேருந்தின் ஓட்டுநர் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு, பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய மகனுக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.50 ஆயிரத்திற்கும் மேல் செலவானதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மகன் தற்போது என்ன படித்து வருகிறார் என்றால் பாலிடெக்னிக் படித்து வருகிறார். விபத்திற்கு பின்னிட்டு என் மகன் எந்த வகுப்பிலாவது பெயில் ஆகியுள்ளாரா என்றால் ஆமாம். அதைக் காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணமாகிவிட்டது என்றாலும், மேற்படி காயம் ஏற்பட்டதனால் அவருடைய

படிப்புக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றாலும், ஏற்பட்டுள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கார்த்திவேல் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளரையும், காப்பீட்டாளரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். அவசிய தரப்பினரைச் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ஒருவேளை இழப்பீடு பெறுவதாக இருந்தால் கார்த்திவேல் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளரையும், காப்பீட்டாளரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து அவர்களிடமிருந்துதான் பெற வேண்டும் என்றால் சரியல்ல. 2 ஆம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடானது அதிகம் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

Sd/- Bharath

Sd/- M. Mekala Mythili,
Sub Judge, Sankari.